07.04.2026 OS.No.35/2024 Dw2 Name :.சதாம்உஷேன்

குறுக்கு விசாரணை

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சி சம்மன் எதுவும் வரவில்லை. வாதியை எனக்கு தெரியும். அவர் ஒரே ஊரை சார்ந்தவர். என்னுடைய வீட்டிலிருந்து சுமார் 1/2 கிமீ தொலைவில் அவர் வீடு இருக்கும். வாதியிடம் என்னுடைய பெற்றோர் லேவாதேவி செய்துள்ளார்கள் என்றால் அவ்வாறு இல்லை. என் தாயாருக்கு தமிழ் எழுதபடிக்க தெரியாது. என்னுடைய தாயார் உருதுமொழியில் தான் கையெழுத்து போடுவார்.
2. என்னுடைய தாயாருக்கு வாதி கடந்த 25.06.2022ல் ரூ.3,00,000/- கடன் கொடுத்துள்ளார் என்றால் உண்மை கிடையாது. அதை மறைத்து நான் பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் சீட்டு கட்டியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வாதிக்கு எதிராக சீட்டு பணம் பெறுவதற்காக சட்டநடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. காவல்நிலைய புகார் சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி எங்களுக்கு கொடுக்கவேண்டிய தொகை தொடர்பாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.
3. தற்சமயம் நான் வாணியம்பாடியில் வசிக்கிறேன். சுமார் 2 ஆண்டுகளாக வசிக்கிறேன். ஊரில் பலரிடம் பணம் பெற்று அதை திரும்பி செலுத்தமுடியாமல் ஊரைவிட்டு வாணியம்பாடியில் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் என்னுடைய தாயார் பெற்றுள்ள கடனை திருப்பி கேட்டு கொடுக்காததால் தான் வாதி

இந்த வழக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 07/04/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE,VANIYAMBADI
Digitally signed by RAJA B
DN: cn=RAJA B, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR DISTRICT.
Date: 2026.04.07 17:52:51 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.